# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**முறையீட்டு மனு எண்: 165/மா/2018**
**ஆணை நாள்: 14–12–2018**

திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன்,
புத்தூர், திருச்சிரப்பள்ளி. --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திருச்சிரப்பள்ளி மாநகராட்சி
மற்றும் அலுவலர்கள். --- எதிர் மனுதாரர்கள்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, எண்.3, ஆபீஸர்ஸ் காலனி, புத்தூர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன் என்பவரது 02.08.2017 தேதியிட்ட முறையீட்டு மனு 07.08.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 165 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு மாநகராட்சி ஆணையரிடம் அறிக்கைகள் பெற்று பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, எண்.3, ஆபீஸர்ஸ் காலனி, புத்தூர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன் என்பவர் தனது 02.08.2017 நாளிட்ட முறையீட்டு மனுவில் திருச்சி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், வார்டு எண்.27, மனை எண்.33ல் தனரெத்தினம் நகரில் உள்ள வணிக ரீதியான கட்டிடத்திற்கு அளவைக் குறைத்தும் குடியிருப்பாக சித்தரித்தும், கட்டிட உரிமையாளருக்குச் சாதகமாக மாநகராட்சி அலுவலர்களால் லட்சக்கணக்கில் பணம் பெற்றுக் கொண்டு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், ஆணையருக்கு 26.08.2016ல் சமூக ஆர்வலரால் அனுப்பப்பட்ட புகார் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை விபரம் தெரியவில்லை

என்றும் தொடர்புடைய வரிதண்டலர், வருவாய் ஆய்வாளர், உதவி வருவாய் அலுவலர், உதவி ஆணையர் மற்றும் பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 15.9.2017 தேதியிட்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர் 12.10.2017அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி தனது விளக்கத்தினை அளிக்க ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன் என்பவரது முறையீட்டு மனு மீதான திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தின் 11.8.2017 தேதியிட்ட அறிவிப்பாணையின்படி கோரப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் தனது 07.09.2017 அறிக்கையில் மேற்படி பொருள் தொடர்பாக ஏற்கனவே திருச்சி திரு.ஒ.பாலசுப்பிரமணியின் என்பவரால் கொடுக்கப்பட்ட புகார் மனுவின் அடிப்படையில் இவ்வலுவலக அலுவலர்கள் அடங்கிய குழு ஒன்று அமைத்து புகார்தாரரால் தெரிவிக்கப்பட்ட கட்டுமானம் நேரடி ஆய்வு செய்யப்பட்டது என்றும், அதனைத் தொடர்ந்து ஆய்வுக்குழு அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் அக்கட்டுமானம் மறு வரிவிதிப்பு செய்யப்பட்டு முன்தேதியிட்டு அபராதத்துடன் வசூல் செய்யப்பட்டு வருகிறது என்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படவில்லை என்றும் இந்நேர்வில் சம்பந்தப்பட்ட 1) உதவி வருவாய் அலுவலர், 2) வருவாய் ஆய்வர் (பொறுப்பு) மற்றும் 3) வருவாய் உதவியாளர் (பொறுப்பு) ஆகியோர் மீது திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பணியாளர்கள் ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல் முறையீட்டு விதிகளின் விதி 8 (2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு, பெறப்பெற்ற விளக்கத்தின் அடிப்படையில் விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்து வருவதாகவும், விசாரணை அலுவலரின் அறிக்கைப் பெற்றவுடன் அதன் அடிப்படை.ல் மேற்படி அலுவலர் / பணியாளர்கள் மீதான குற்றச்சாட்டுகள் இறுதி செய்யப்பட்டு இறுதி ஆணை பிறப்பிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வறிக்கையுடன் பெறப்பெற்ற ஆவணத்தில் கட்டிடத்தின் அடித்தளம் மற்றும் தரைத்தளம் வணிக பயன்பாட்டில் உள்ள நிலையில் மேற்கண்ட கட்டிடத்திற்கு வணிக பயன்பாட்டின் கீழ் வரித் தொகை கணக்கிடும் பொழுது அரையாண்டு வரித் தொகை ரூ.16,947/– என கேட்பு எழுப்புவதற்கு பதிலாக குடியிருப்பு பயன்பாட்டின்கீழ் அரையாண்டு வரித் தொகை ரூ.4,122/– என வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளதால் ஏற்கனவே வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளதின் அடிப்படையில் கணக்கிடும்பொழுது மாநகராட்சிக்கு அரையாண்டிற்கு ரூ.12,825/– வீதம் வருவாய்

இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாநகராட்சி சட்டம் 283 விதியின் கீழ் தரைத்தளம் மற்றும் முதல் தளங்களுக்கு வணிக பயன்பாட்டின்கீழ் அபராதத் தொகையுடன் கூடிய வரித் தொகை கணக்கிடும் பொழுது அரையாண்டு வரித்தொகை ரூ.16,947/– (15,217+1730) எனவும் குடியிருப்பு பயன்பாட்டின் கீழ் உள்ள இரண்டாம் தளம், மூன்றாம் தளம் மற்றும் நான்காவது தளத்தில் கட்டப்பட்டுள்ள 195 சதுர அடி பரப்பளவுள்ள கட்டிடங்களுக்கு அபராத தொகையுடன் கூடிய வரித் தொகை கணக்கிடும்பொழுது அரையாண்டு வரித் தொகை ரூ.7,198/– (5,368+1,830) எனவும் தெரியவருகிறது. மேலும் இரண்டு தளங்களை கொண்ட குடியிருப்பு பயன்பாடு கட்டடம் கட்டுவதற்கு வரைபடம் சமர்ப்பித்து வணிக உபயோகக் கட்டிடமும், மாநகராட்சியின் திட்டம் மற்றும் கட்டிட அனுமதியின்றி இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளங்களை கொண்ட கட்டிடம் கட்டப்பட்டுள்ளததும், நான்காவது தளத்தில் 195 சதுர அடி பரப்பில் அறை ஒன்றும், மேற்படி தளத்தில் கட்டிட கட்டுமானம் கட்டுவதற்கான கான்கிரீட் தூண்கள் அமைக்கப்பட்டு வருவதும் தெரியவருகின்றது.

இந்நேர்வில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் அத்துடன் பெறப்பெற்ற ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அரியமங்கலம் கோட்டம், வார்டு எண்.27, பிளாட் எண்.33 ல் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மறு வரிவிதிப்பு செய்யப்பட்டு அபராதத்துடன் வரிவசூல் செய்யப்பட்ட விபரம், மாநகராட்சியின் முறையான அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள தரைத்தளம் மற்றும் முதல்தளம் (குடியிருப்பு பயன்பாட்டிற்கென அனுமதி பெற்று வணிக பயன்பாட்டில் உள்ளது) பற்றியும், திட்டம் மற்றும் கட்டிட அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் தளம் பற்றியும் மற்றும் நான்கவது தளத்தில் கட்டப்பட்டுள்ள 195 சதுரடி பரப்பிலான அரை ஒன்றும் மேற்படி தளத்தில் கட்டிடம் கட்டுமானம் கட்டுவதற்காக கான்கீரீட் தூண்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பு உள்ளது.

அனைத்தும் மிகுந்தகவனமுடம் பரிசீலிக்கும் போது அனுமதியின்றி தளங்கள் கட்டியுள்ளதும் மேலும் குடியிருப்புக்கு வரைபடம் அனுமதித்து வணிக உபயோக கட்டிடம் கட்டப்பட்டுள்ளதென்றும் அனுமதியின்றி இரண்டாம் தளம், மூன்றாம் தளம் மற்றும் நான்காவது தளத்தில் 195 சதுரடியில் ஒரு அறையும் மேலும் கட்டுமானம் கட்டிட காங்கிரீட் தூண்கள் அமைத்துள்ளதும் உறுதி செய்யப்படுகிறது. இவற்றையெல்லாம் ஆய்வு செய்யாமல் எவ்வாறு வரிவிதிப்பு செய்யப்பட்டது என்பது திருச்சி மாநகராட்சிக்குதான் புரியும் செய்தியாக உள்ளது. தற்போது முன்தேதியிட்டு அபராதத்துடன் வசூலிக்கப்பட்டது இதில் வருவாய் இழப்பு இல்லை

என்பது ஏற்புடைய விளக்கமாக இல்லை. சட்ட விரோதமாக, அனுமதியின்றி அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் விதிகள் மீறி கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு செய்வது என்பது விதிகளை மீறி செயல்பட்டதை சட்டபூர்வமாக்கி மறைமுகமாக முறைப்படுத்தி தவறு செய்தவர்களுக்கு துணை போகும் செயலாகவே இம்முறைமன்றம் கருதுகின்றது.

மேலும் 6.6.2017ல் தனி அலுவலர் செயல்முறைகளின்படி குற்றம்சாட்டப்பட்ட அலுவலர்கள் மீது விசாரணை மேற்கொண்டு 30 நாட்களுக்குள் விசாரணை அறிக்கை அனுப்பிவைத்திடுமாறும் ஆணையிடபட்டுள்ளது. ஆனால் 18 மாதங்கள் கழிந்த நிலையலும் இன்னமும் முறையான முடிவாக நடவடிக்கை எடுக்கப்படாதது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

இந்நேர்வில் தவறுகள் எதேச்சையாக நடந்ததாகத் தெரியவில்லை. மாநகராட்சி ஆணையர் ஒப்பமின்றி விதிகளுக்கு முரணாக வரிவிதிப்புகள் விதிக்கப்பட்டதும் திட்டமிட்ட ஒரு குற்றச் செயலாகும்.

எனவே இது குறித்து தஞ்சாவூர் நகராட்சிகளின் மண்டல இயக்குநர் முழு கோப்புகளை பரிசீலித்து மேலே குறிப்பிட்ட கடுமையான குற்றங்கள் குறித்து உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட துரிதப்படுத்தி எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரத்தினை 30 தினங்களில் இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரியப்படுத்திடவும் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட தாமதம் செய்த அலுவலர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடவும் ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் 7/1/2019

பெறுநர்

1. திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன்,
எண்.3, ஆபீசர்ஸ் காலனி,
புத்தூர், திருச்சி மாநகராட்சி,
திருச்சி.
2. மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்,
தஞ்சாவூர்.
3. ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி.
4. நகராட்சி நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை.